Web copy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 63/2024 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW1 | Caste | : |
| Name | : சுமதி | Calling | : |
| Father / Husband Name | : சிவக்குமார் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 16th July 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் அண்ணாநகரில் வசித்து வருகிறேன். என் கணவர் சிவக்குமார் இறந்துவிட்டார். எனக்கு சதீஸ்கார்த்திக் என்ற ஒரு மகன் உள்ளார். நான் தற்சமயம் வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். சம்பவ சமயம் கல்லல் மெயின் ரோட்டில் கனகாம்பாள் காம்பிளக்சில் சிவம் என்ற பெயரில் வெள்ளிக் கடை வைத்து நடத்தி வந்தேன். கடந்த 09.08.2023 ம் தேதியன்று மதியம் 01.00 மணியளவில் 30 வயது மதிக்கத் தக்க ஒரு பெண் ஒரு குழந்தையுடன் நகை வாங்குவது போல் வந்தவர் எதுவும் வாங்காமல் சென்றுவிட்டார்.

2) அதன் பிறகு 12.08.2023 ம் தேதி மேற்படி கடையிலிருந்த பொருள்களை சரிபார்த்தபோது குறைவாக காணப்பட்டதால் சிசிடிவி பதிவுகளை காலை 09.00 மணியளவில் பார்த்தபோது ஏற்கனவே 09.08.2023 ம் தேதியன்று வந்த பெண் தன்னுடைய உடையில் கொலுசு எண்ணிக்கை 2 எடை 140 கிராம் மற்றும் அரைஞாண் கொடி ஒன்று எடை 38 கிராம் ஆக மொத்தம் 178 கிராம் வெள்ளிப் பொருளை தன்னுடைய ஆடைக்குள் மறைத்து எடுத்துச் சென்றது தெரியவந்தது. அதன் மொத்த மதிப்பு ரூபாய் 17,700/-. அக்கம் பக்கத்தில் அந்த பெண் குறித்து விசாரிக்கும்போது பணக்கரையைச் சேர்ந்த கௌசல்யா என்பது தெரியவந்தது.

3) மேற்படி சிசிடிவி பதிவைப் பார்த்தவுடன் நானும் எனது மகனும் காளையார்கோவில் காவல் நிலையம் சென்றோம். மேற்படி சம்பவம் தொடர்பாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது

தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் சொன்ன புகாரை என் மகன் தான் எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) அதன் பிறகு புகார் கொடுத்த அன்றே சுமார் மாலை 05.30 மணியளவில் காளையார்கோவில் காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் தொடர்பு கொண்டு வெள்ளிப் பொருள்களையும் ஆளையும் பிடித்துவிட்டதாக தகவல் சொன்னதன் பேரில் நானும் எனது மகனும் காவல் நிலையம் சென்றோம். அங்கு வைத்து எதிரியையும் எங்களுடைய வெள்ளிப் பொருள்களையும் அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் மனு செய்து பொருள்களை பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தியதன் பேரில் இந்நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி பொருள்களைப் பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பொருள்களைத் தான் எதிரி என் கடையிலிருந்து திருடிச் சென்றார். மேற்படி திருட்டு குறித்து பதிவுகள் உள்ள எனது கடையின் சிசிடிவி பதிவுகள் பதிவிறக்கம் செய்து போலீசுடன் ஒப்படைத்தோம்.

5) **அந்த வெள்ளிப் பொருள்களை காட்டக்கூடிய புகைப்படம் அ.சா.பொ.1 ஆகும்**. **அந்த பென்டிரைவ் அ.சா.பொ.2 ஆகும்**. என் கடையிலிருந்து திருடிச் சென்ற அந்தப் பெண் இன்றைய தினம் நீதிமன்றத்தில் இல்லை. அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:- வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், 16.07.2025,**
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

Web Copy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 63/2024 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 2 | Caste | : |
| Name | : சதீஸ்கார்த்திக் | Calling | : |
| Father / Husband Name | : சிவக்குமார் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 16th July 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் அண்ணாநகரில் வசித்து வருகிறேன். என் அப்பா சிவக்குமார் இறந்துவிட்டார். நான் தற்சமயம் சென்னையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அம்மா. சம்பவ சமயம் கல்லல் மெயின் ரோட்டில் கனகாம்பாள் காம்பிளக்சில் சிவம் என்ற பெயரில் வெள்ளிக் கடை வைத்து நடத்தி வந்தோம். நானும் என் அம்மாமவும் அந்தக் கடையைப் பார்த்துக்கொள்வோம். கடந்த 09.08.2023 ம் தேதியன்று மதியம் 01.00 மணியளவில் என் அம்மா மேற்படி வெள்ளிக்கடையில் இருந்தபோது சுமார் 29 - 30 வயது மதிக்கத் தக்க ஒரு பெண் ஒரு குழந்தையுடன் நகை வாங்குவது போல் வந்தவர் எதுவும் வாங்காமல் சென்றுள்ளார்.

2) அதன் பிறகு 12.08.2023 ம் தேதி மேற்படி கடையிலிருந்த பொருள்களை சரிபார்த்தபோது குறைவாக காணப்பட்டதால் சிசிடிவி பதிவுகளை காலை 09.00 மணியளவில் பார்த்தபோது ஏற்கனவே 09.08.2023 ம் தேதியன்று வந்த பெண் தன்னுடைய உடையில் கொலுசு எண்ணிக்கை 2 எடை 140 கிராம் மற்றும் அரைஞாண் கொடி ஒன்று எடை 38 கிராம் ஆக மொத்தம் 178 கிராம் வெள்ளிப் பொருளை தன்னுடைய சுடிதார் ஆடைக்குள் மறைத்து எடுத்துச் சென்றது தெரியவந்தது. அதன் மொத்த மதிப்பு ரூபாய் 17,700/-.

3) மேற்படி சிசிடிவி பதிவைப் பார்த்தவுடன் நானும் எனது அம்மாவும் காளையார்கோவில் காவல் நிலையம் சென்றோம். மேற்படி சம்பவம் தொடர்பாக என் அம்மா

Web copy

தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த அ.சா.ஆ.1 புகாரை நான் தான் எழுதினேன். என் அம்மா கையொப்பம் செய்தார்.

4) அதன் பிறகு புகார் கொடுத்த அன்றே சுமார் மாலை 05.30 மணியளவில் காளையார்கோவில் காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் தொடர்பு கொண்டு வெள்ளிப் பொருள்களையும் ஆளையும் பிடித்துவிட்டதாக தகவல் சொன்னதன் பேரில் நானும் எனது அம்மாவும் காவல் நிலையம் சென்றோம். அங்கு வைத்து எதிரியையும் எங்களுடைய வெள்ளிப் பொருள்களையும் அடையாளம் காட்டினோம். நீதிமன்றத்தில் மனு செய்து பொருள்களை பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தியதன் பேரில் இந்நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி பொருள்களை என் அம்மா பெற்றுக் கொண்டார். மேற்படி திருட்டு குறித்து பதிவுகள் உள்ள எங்களது கடையின் சிசிடிவி பதிவுகள் பதிவிறக்கம் செய்து போலீசுடன் ஒப்படைத்தோம்.

5) அக்கம் பக்கத்தில் அந்த பெண் குறித்து விசாரிக்கும்போது சருகணி பக்கத்தில் உள்ள பணக்கரையைச் சேர்ந்த கௌசல்யா என்பது தெரியவந்தது. எங்கள் கடையிலிருந்து திருடிச் சென்ற அந்தப் பெண் இன்றைய தினம் நீதிமன்றத்தில் இல்லை. நான் சிசிடிவிப் பதிவிலும் காவல் நிலையத்திலும் அவரைப் பார்த்துள்ளேன். அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:- வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், 16.07.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy